செப்.11-ல் நாடெங்கும் ஆர்ப்பாட்டம்! சமூக நீதியை ஒழிக்க ஒன்றிய பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். சூழ்ச்சி!

# மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஜாதிவாரி கணக்கெடுப்பை நீக்கிட சூழ்ச்சி!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, செப்.7-

இந்திய வரலாற்றில் சமூகநீதியை ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்பே தென்னாடு குறிப்பாக பழைய சென்னை மாகாண நீதிக்கட்சி என்ற திராவிடர்களின் அரசு, ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் கல்வி, உத்தியோகப் பணிகளில், அதற்குமுன் பல நூற்றாண்டுகளாகத் திறக்கப்படாத மனுதர்ம இரும்புக் கதவை அசைத்து, மெல்ல திறந்தது! அதனால், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் ஆகியோரும் நுழைந்து, படித்து, பணித்தகுதி பெற்றனர்.

சமூகநீதி கிடைத்த வரலாறு!

காலங்காலமாக இந்த நாட்டின் குடிமக்களான அவர்களுக்கு, வந்தேறிய ஆரியத்தால் வாய்ப்புகள் மறுக்கப்பட்டதை மாற்றிட, சமூகநீதி இயக்கங்களான ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் இயக்கம் என்ற பல பெயர்களில் மக்களிடையே உரிமைக் குரல் எழுப்பி, "100-க்கு 3 சதவிகிதமாக உள்ள உயர்ஜாதிப் பார்ப்பனர்களுக்கே அவற்றையும் ஏகபோகமாக்கிக் கொண்டு, அதற்குரிய பல வகை பாதுகாப்பு, 'தகுதி - திறமை' என்ற வடிகட்டல் முறை என்றெல்லாம் வைத்து, அரும்பாடுபட்டுப் பெற்ற சமூகநீதி - இட ஒதுக்கீடான 'Compensatory Justice' ஏற்கெனவே இழைக்கப்பட்ட 'பல்லாண்டு சமூக அநீதிக்கானப் பரிகார நீதியாக', 'பள்ளத்தில் வீழ்ந்திருந்த மனிதரெலாம் விழி பெற்றுக் கொள்ளத்' தொடங்கிய உரிமைப் போர், இன்றளவும் நீடிக்கும் ஆரிய - திராவிடப் போராகவே - பல முகமூடிகள் அணிந்த நிலையிலும், தொடர்ந்த வண்ணமே உள்ளது!

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அம்பேத்கரின் அரிய முயற்சியால், முகப்புரை என்ற கொள்கைத் தத்துவ அறிமுக உரையான 'Preamble' என்பதில், 1.சமூகநீதி 2.பொருளாதார நீதி 3.அரசியல் நீதி என்பது பறிக்கப்பட முடியாத பாதிக்கப்பட்ட மக்களின் உரிமை என்பது பாதுகாக்கப்பட்ட சட்ட நிலையாக இருந்தாலும்,

**அரசியலமைப்புக் கட்டுமானத்தை உடைப்பதா?**

பிரதமர் மோடி தலைமையில் உள்ள ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஒன்றிய ஆட்சியில் தொடர்ந்து, 'சாண் ஏறினால் முழம் சறுக்குதல்' என்பதைப் போல, 'சாண் தந்தால்' 'முழம் பறித்தல்' என்ற புதுவகை சூழ்ச்சிமூலம், அரசியலமைப்புச் சட்ட அடிப்படைக் கட்டுமானத்தைத் தகர்க்கும் வகையில் சட்ட விரோத, நியாய விரோத முறைகளின்மூலம் ஒடுக்கப்பட்டோரது உரிமைகள் பறிக்கப்படுவது தொடர்ந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நடைபெற்று வருவது கொடுமையிலும் கொடுமை!

பொய் வழக்கு ஒன்றின் தீர்ப்பின் காரணமாக, ஒடுக்கப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்ட சமூகநீதி, தந்தை பெரியாரின் போராட்டத்தால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம்மூலம் மீட்கப்பட்டது.

அதனை அறவே திரித்து, அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளுக்கே தவறான விளக்கம் தந்து, உச்சநீதிமன்றத்தின் உயர்ஜாதி ஆதிக்க அதிகார வாய்ப்பினைப் பயன்படுத்தி, பொருளாதார அளவுகோலை நுழைத்தனர்.

'பொருளாதார அடிப்படை செல்லாது' என்ற பழைய உச்சநீதிமன்றத் தீர்ப்பைப் புறந்தள்ளி, பொருளாதாரத்தில் நலிந்த அரிய உயர்ஜாதியினருக்கு, குறிப்பாகப் பார்ப்பனர்களுக்கு, 10 சதவிகித இடஒதுக்கீடு என்று திணித்து உள்ளே கொண்டு வந்து, '50 சதவிகிதத்திற்கு மேலா?' என்று முன்பு கேட்ட அதே ஆரிய அதிகார வர்க்கம், நீதித்துறை களிலும் கூடுதல் 10 சதவிகிதம் உயர்ஜாதி ஏழைகள் (EWS) மூலம் என்றவுடன், தலையசைத்து சட்ட சம்மதம் தந்து, ஒரே வாரத்தில் நிதி ஒதுக்கீடு உள்பட தரப்பட்ட அதிசயம் நடந்தது. (அரசியலமைப்புச் சட்டத் திருத்த நிறை வேற்றமும் அதில் அடக்கம்!).

மண்டல் அறிக்கை அமலாக்கம் தொடர்பான 'இந்திரா சகானி' வழக்கில், ஒன்பது உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட முழு அமர்வு வழங்கிய தீர்ப்பை, உயர்ஜாதியினருக்கான பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீட்டை அய்ந்து நீதிபதிகள் கொண்ட அமர்வின் தீர்ப்பு (அதுவும்கூட 3:2 என்ற நிலையில்) மாற்ற இயலுமா? அதிலும் மூன்று நீதிபதிகள் தானே உயர்ஜாதியினருக்கு இடஒதுக்கீடு வழங்க ஒப்புக் கொண்டனர். இரு நீதிபதிகள் உயர்ஜாதியினருக்கான இடஒதுக்கீடு அரசியலமைப்புச் சட்டத்தின் படியும், முந்தைய தீர்ப்புகளின் அடிப்படையிலும் முரணானது என்று தீர்ப்பளித்தனர்.

ஆக, ஒரே ஒரு நீதிபதி மாற்றி வழங்கிய தீர்ப்பு தானே, இந்தியாவின் 140 கோடி மக்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

தற்போது, மக்கள் தொகையில் 100-க்கு 65 விழுக்காட்டிற்குமேல் உள்ள பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீட்டை ஒழித்துக்கட்ட ஒரு பெரும் சூழ்ச்சி திட்டத்தை மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்மூலம் "சட்ட ரீதியாகச்"(!) செய்ய முனைப்புக் காட்டி வருகின்றனர்.

**சமூகநீதியை ஒழிக்க புதிய சூழ்ச்சி!**

ஜாதிவாரி கணக்கெடுப்பை முன்பு எதிர்த்த பா.ஜ.க. கடந்த பீகார் மாநிலத் தேர்தலின் போது, ஜாதி வாரி கணக்கெடுப்பு நடத்துவதாக ஒப்புக்கொண்டு விட்ட நிலையில், இப்போது ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. அரசும், ஆர்.எஸ்.எஸ். ஆதரவு அதிகார வர்க்கமும் ஒரு புதிய சூழ்ச்சியை, தந்திரத்தை நுழைத்து, அதனை அறவே மறுக்க முடிவு செய்துள்ளன -

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் (OBC) என்று இருப்பதால், 'வகுப்பு என்று தான் இருக்கிறது. 'ஜாதி' என்று இல்லை (அரசியலமைப்புச் சட்டத்தில் Class - Not Caste என்ற) ஒரு யுக்தியான வாதத்தைக் காரணம் காட்டி, ஏற்கெனவே நாட்டிலுள்ள சமூக நீதி, இட ஒதுக்கீட்டையே ஒழித்துக்கட்டத் தொடங்கிவிட்டனர்.

ஒட்டுமொத்த பிற்படுத்தப்பட்ட மக்களும், கிரீமிலேயர் திணிக்க முன்வந்தபோது, ஒடுக்கப்பட்ட (எஸ்.சி., எஸ்.டி.,) மக்களும் ஒருங்கிணைந்து அறவழியில் போராட்டக் களம் அமைக்க வேண்டிய அரிய தருணம் வந்துவிட்டது!

**வகுப்பு – கிளாஸ் என்பதற்கு அண்ணல் அம்பேத்கரும் – மண்டல் குழுவும் கூறியுள்ளதென்ன?**

அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள வகுப்பு - Class என்பதற்கு, அதனை எழுதிய மூல கர்த்தா டாக்டர் அம்பேத்கர் அவர்களே, அரசியலமைப்புச் சட்ட முதல் திருத்தத்தை, சட்ட அமைச்சர் என்ற கூடுதல் தகுதியுடன் கொண்டு வந்தபோது, நாடாளுமன்றத்திலேயே சிறப்பாக விளக்கியுள்ளார்.

இதனை மண்டல் கமிஷன் அறிக்கையிலும், பிறகு வெளிவந்த உச்சநீதிமன்றத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல தீர்ப்புகளிலும் எடுத்துக் காட்டியுள்ளது.

இந்திரா சஹானி வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதி பி.பி. ஜீவன் ரெட்டி அவர்கள் தனக்காகவும், அப்போதைய தலைமை நீதிபதி எம்.ஹெச்.கனியா, மற்ற நீதிபதிகள் எம்.என்.வெங்கடாச்சல்யா, எ.எம்.அகமதி ஆகியோருக்காக எழுதிய தீர்ப்பில்,

**அப்பகுதியை அப்படியே தருகிறோம்.**

Para. 662. Chapter VII deals with 'Social Justice, Constitution and the law'. It referes to the relvant provisions of the Constitution, to the decision in M.R.Balaji & Ors v. State of Mysore (1963 Suppl.(1) S.C.R.439) and various subsequent decisions of this Court and discusses the principles flowing from the said decisions. It notes that the subsequent decisions of this Court in C.A.Rajendran v. Union of India (1968 (1) S.C.R.721), State of Andhra Pradesh & Ors. v. P.Sagar (1968 (3) S.C.R.595) and State of Andhra Pradesh & Ors. v. U.S.V.Balram (1972 (3) S.C.R.247) etc. show a marked shift from the original position taken in Balaji on several important points. In particular, it refers to the observations in Rajendran to the effect that "caste is also a class of citizens and if the class as a whole is socially and educationally backward, reservation can be made in favour of such a caste on the ground that it was socially and educationally backward class of citizens within the meaning of Article 15(4)". It refers to the statement in A.Peeriakaruppan etc. v. State of Tamil Nadu (1971 (2) S.C.R.430) to the effect that "a caste has always been recognised as a class." It also commends the dissenting view of Subba Rao, J. in T.Devadasan v. Union of India (1964 (4) S.C.R.680).

இதன் தமிழாக்கம் வருமாறு:

662. ஏழாவது அத்தியாயம் 'சமூக நீதி, அரசியலமைப்பு மற்றும் சட்டம்' குறித்து விவாதிக்கிறது. இது தொடர்புடைய அரசியலமைப்பின் விதிகள், "'எம்.ஆர். பாலாஜி மற்றும் பிறர்' எதிர் 'மைசூர் மாநிலம் (1963 Suppl.(1) S.C.R.439) வழக்கின் தீர்ப்பு மற்றும் இம்மன்றத்தின் பல்வேறு பிந்தைய தீர்ப்புகளைக் குறிப்பிடுவதுடன், அத்தீர்ப்புகளிலிருந்து பெறப்படும் கோட்பாடுகளையும் விவாதிக்கிறது. சி.ஏ. ராஜேந்திரன் எதிர் இந்திய ஒன்றியம் (1968 (1) S.C.R.721), ஆந்திரப் பிரதேச மாநிலம் மற்றும் பிறர் எதிர் பி.சாகர் (1968 (3) S.C.R.595) மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலம் மற்றும் பிறர் எதிர் யு.எஸ். வி. பலராம் (1972 (3) S.C.R.247) போன்ற வழக்குகளில் இம்மன்றம் வழங்கிய பிந்தைய தீர்ப்புகள், 'பாலாஜி' வழக்கில் எடுக்கப்பட்ட அசல் நிலைப்பாட்டிலிருந்து பல முக்கிய அம்சங்களில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் காட்டுவதை இது சுட்டிக்காட்டுகிறது. குறிப்பாக, "ஜாதி என்பதும் குடிமக்களின் ஒரு வகுப்பே (class) ஆகும்; ஒரு வகுப்பு ஒட்டுமொத்தமாகச் சமூக மற்றும் கல்வி ரீதியாகப் பின்தங்கிய நிலையில் இருந்தால், அரசியலமைப்பின் 15(4)ஆவது பிரிவின் பொருளில் அது சமூக மற்றும் கல்வி ரீதியாகப் பின்தங்கிய குடிமக்கள் வகுப்பாகக் கருதப்பட்டு, அந்த ஜாதிக்கு இடஒதுக்கீடு வழங்கப்படலாம்'' என்ற ராஜேந்திரன் வழக்கின் கருத்துகளை இது குறிப்பிடுகிறது.

"ஒரு 'ஜாதி' எப்போதும் ஒரு 'வகுப்பாகவே' (class) அங்கீகரிக்கப்பட்டு வந்துள்ளது" என்ற ஏ.பெரியகருப்பன் மற்றும் பிறர் எதிர் தமிழ்நாடு மாநிலம் (1971 (2) S.C.R.430) வழக்கின் கூற்றையும் இது குறிப்பிடுகிறது. மேலும், டி.தேவதாசன் எதிர் இந்திய ஒன்றியம் (1964 (4) S.C.R.680) வழக்கில் நீதிபதி சுப்பா ராவ் தெரிவித்த மாறுபட்ட கருத்தையும் இது பாராட்டுகிறது.

Para. 698. It is worthy of notice that the Parliament, which enacted the first Amendment to the Constitution, was in fact the very same Constituent Assembly which had framed the Constitution. The speech of Dr. Ambedkar on the occasion is again instructive. He said:

Then with regard to article 16, clause (4), my submission is this that it is really impossible to make any reservation which would not result in excluding somebody who has a caste. I think it has to be borne in mind and it is one of the fundamental principles which I believe is stated in Mulla's edition on the very first page that there is no Hindu who has not a caste. Every Hindu has a caste he is either a Brahmin or a Mahratta or a Kundby or a Kumbhar or a carpenter. There is no Hinduthat is the fundamental propositionwho has not a caste. Consequently, if you make a reservation in favour of what are called backward classes which are nothing else but a collection of certain castes, those who are excluded are persons who belong to certain castes. Therefore, in the circum stances of this country, it is impossible to avoid reservation without excluding some people who have got a caste."

**இதன் தமிழாக்கம் வருமாறு:**

698. அரசியலமைப்பிற்கான முதல் திருத்தத்தை இயற்றிய நாடாளுமன்றம் என்பது, உண்மையில் அதே அரசியலமைப்பு நிர்ணயசபையே என்பது குறிப்பிடத்தக்கது. அந்தச் சூழலில் டாக்டர் அம்பேத்கர் ஆற்றிய உரை மீண்டும் ஒரு முறை கவனிக்கத்தக்கது. அவர் கூறியதாவது:

"அடுத்து, கூறு 16 (4) குறித்து நான் முன்வைக்கும் கருத்து இதுதான்: ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்த ஒருவரை விலக்கி வைக்காத வகையில் இடஒதுக்கீட்டை உருவாக்குவது என்பது உண்மையில் சாத்தியமற்றது. இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்; 'முல்லா'வின் (Mulla) நூலின் முதல் பக்கத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளதாக நான் நம்பும் அடிப்படைத் தத்துவங்களில் இதுவும் ஒன்று: அதாவது, ஜாதி இல்லாத இந்து என்று எவரும் இல்லை. ஒவ்வொரு இந்துவுக்கும் ஒரு ஜாதி உண்டு அவர் பார்ப்பனராகவோ, மராத்தாவாகவோ, குன்பியாகவோ (Kundby), கும்பாராகவோ (Kumbhar) அல்லது தச்சராகவோ இருக்கலாம். ஜாதி இல்லாத இந்து என்று யாரும் இல்லை அதுவே அடிப்படை உண்மை. எனவே, 'பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்' என்று அழைக்கப்படுபவர்களுக்கு இவர்கள் உண்மையில் சில ஜாதிகளின் தொகுப்பே ஆவர் நீங்கள் இடஒதுக்கீடு அளித்தால், அதனால் விலக்கி வைக்கப்படுபவர்களும் ஏதோ ஒரு ஜாதியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள். ஆகையால், இந்நாட்டின் சூழலில், ஜாதி அடையாளத்தைக் கொண்ட சிலரை விலக்கி வைக்காமல் இடஒதுக்கீட்டைச் செயல்படுத்துவது என்பது சாத்தியமற்றது."

இவ்வளவு தெளிவாக 'வகுப்பு' (Class) என்பது ஜாதிகளின் தொகுப்பே (Builde of Castes) என்று விளக்கப்பட்டதற்குப் பிறகு, இப்போது வந்து தவறான வியாக்கியானங்களுடன் நமக்கு 'கிளாஸ்' எடுக்க முற்படுகிறது ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. அரசு.

**தி.மு.க. அரசு எடுத்த நிலைப்பாட்டிற்குக் காரணம் என்ன?**

ஜாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கப்படும் என்றுதானே பிரதமர் மோடி வெளிப்படையாக அறிவித்தார் அதற்கும் பின்னரும், இப்போது ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கும் இடையில் என்ன நடந்தது?

இட ஒதுக்கீடு தொடர்பான வழக்குகள் வரும்போதெல்லாம் அளவிடற்குரிய தரவு (Quantifiable Data) இருக்கிறதா என்றுதானே உச்சநீதிமன்றம் கேட்கிறது? அதை ஒன்றிய அரசுதானே ஜாதிவாரிக் கணக்கெடுப்பின் (Castewise Census) மூலம் எடுக்க முடியும். மாநில அரசுகளால் சமூகநீதி சர்வே மட்டும்தானே எடுக்க முடியும் அந்த சர்வேயும் இட ஒதுக்கீடு வழங்குவதற்கு போதுமானதில்லை என்பது பீகாரிலும், கருநாடகத்திலும் கிடைத்துள்ள அனுபவங்கள் அல்லவா? அதனால்தான், தமிழநாட்டில் கடந்த முறை ஆட்சியில் இருந்த தி.மு.க. ஜாதி வாரி கணக்கெடுப்பு (சென்சஸ்) வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி வந்தது. அதற்கு மாறாக, ஒன்றிய அரசு, சென்சஸ் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தாமல் சர்வே ஏன் எடுக்கவில்லை என்று மாநில அரசுகளைக் கேட்பதால், அரசியல் உள்நோக்கங்களைத் தவிர வேறு என்ன பயன்? அந்த கணக்கெடுப்பிலும் ஒன்றிய அரசு குழப்பத்தை ஏற்படுத்த முனையுமானால் அதை முறியடித்த முந்தைய அரசை நோக்கித்தானே குரல் எழுப்ப வேண்டும்.

பல்வேறு முறையீடுகள் வைத்து, போராட்டங்களும் நடத்தி, வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டும், 95 ஆண்டுகளுக்குப் பிறகு எடுக்கப்படும் ஜாதிவாரிக் கணக்கெடுப்பில், பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான கணக்கெடுப்பில் மட்டும் குழப்பங்களை ஏற்படுத்துவதும், குழப்பமான முடிவுகள் கிடைக்கும் வகையிலேயே முழுமையற்ற விவரங்களைச் சேகரிப்பதும் இந்நாட்டின் பெரும்பான்மை மக்களான பிற்படுத்தப்பட்டோருக்கு அநீதி இழைப்பதாகும். 1931 சென்சஸ்சை மாடலாகக் கொள்ள வேண்டும்!

**செப்.11 இல் தமிழ்நாடு – புதுச்சேரியில் ஆர்ப்பாட்டங்கள்!**

சமூக நீதிக்காக போராடும் இயக்கங்களும், அமைப்புகளும் இதை எதிர்த்து போராட்டக் களம் காண வேண்டிய தவிர்க்கவியலாத சூழலை ஒன்றிய அரசு ஏற்படுத்தியுள்ளது. பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக எப்போதும் களம் காணும் திராவிடர் கழகம் இந்தக் களத்தை மீண்டும் இப்போது தொடங்கி வைக்கிறது. வரும் செப்டம்பர் 11 அன்று தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அனைத்து கழக மாவட்டங்களிலும், முக்கிய நகரங்களிலும் திராவிடர் கழகத்தின் சார்பில், "ஜாதிவாரி கணக்கெடுப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கு அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், சமூகநீதிக்காக நீதிமன்றங்கள் கேட்கும் முழுமையான விவரங்களைத் திரட்ட வலியுறுத்தியும்" அறவழி ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்.

**சென்னையில் நான் பங்கேற்கிறேன்!**

சென்னையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் நான் (கி.வீரமணி) பங்கேற்கிறேன். ஒத்த கருத்துடையோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்து சமூக நீதிக்கான குரலை வலுப்படுத்த வரலாம்; வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

திராவிட இயக்கத்தின் அடிநாதமான சமூகநீதிக்காக தந்தை பெரியார் பிறந்த இந்த மாதத்தில் நமது போராட்டம் தொடங்கட்டும்! கருஞ்சட்டைத் தோழர்களே தயாராவீர்!

பெரியார் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு இந்த போராட்டத்தை விட பொருத்தமான தொடக்கம் வேறு உண்டோ?

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.




# தி.மு.க. இளைஞர் அணி



**தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித்தொகை மற்றும் பொற்கிழியாகப் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25 பேருக்கு**

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் ரூ.6,25,000/– வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, கழகத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டுவருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வுசெய்து, இந்த நிதி உதவிகளை வழங்கிவருகிறார், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

அந்த வகையில், செப்டம்பர் மாதத்தில் நிதி உதவிகளைப் பெறும் 25 பயனாளிகளின் விவரம் வருமாறு :

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1. | பா.ஹரீஸ்வரன், த/பெ பார்த்தசாரதி, 2/380/1, எம்.ஜி.ஆர்.நகர், பிரதான சாலை, டி.சவேரியார்புரம், தூத்துக்குடி – 628 002 |
| 2. | சு.ஏழுமலை, த/பெ சுப்பிரமணி, 2/117, கர்லம்பாக்கம், பள்ளிப்பட்டு, திருவள்ளூர் – 631 202 |
| 3. | தி.முல்லைவேந்தன், த/பெ திருமுருகன், 192, தெற்குத் தெரு, செம்படாக்குறிச்சி, வெங்கடாம்பேட்டை, சங்கராபுரம், கள்ளக்குறிச்சி – 606 207. |
| 4. | ச.பாலசுகுமாரன், த/பெ சக்திவேல், 13/8, தெற்குத் தெரு, கொக்கரசன்கோட்டை, கடலாடி, இராமநாதபுரம் – 623 115 |
| 5. | செ.சந்தோஷ்குமார், த/பெ செந்தில், 93, ஆசாரி தெரு, பெரியநெசலூர், வேப்பூர், கடலூர் – 606 304 |
| 6. | சு.சிவரஞ்சினி, க/பெ சுப்பிரமணியன், 28/34, கள்ளிப்பாலம் சாலை, கிருஷ்ணா நகர், காசிபாளையம், ஈரோடு – 638 454 |
| 7. | சி.மாணிக்கம், த/பெ சின்னையா, 47, இராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை – 600 004 |
| 8. | பா.பழனியம்மாள், த/பெ பாலசுப்பிரமணி, 1, எம்.எஸ்.நகர், கொங்கு பிரதான சாலை, பள்ளிவாசல் தெரு, திருப்பூர் – 641 607 |
| 9. | ஏ.ராஜ்குமார், த/பெ ஏகாம்பரம், 1246, சின்னஓபுளாபுரம், பெரியஓபுளாபுரம், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் – 601 201 |
| 10. | க.வடிவேல், த/பெ கணபதி, 4/316, சம்படி தெரு, சேகல், திருமருகல், நாகப்பட்டினம் – 609 702 |
| 11. | சி.கவிமாறன், த/பெ சிவக்குமார், 99, கொண்டசாமி நாயுடு வீதி–1, வேலாண்டிபாளையம், கோயம்புத்தூர் – 641 025 |
| 12. | பா.அனுஸ்ரீ, த/பெ பாலமுருகன், 1/400, பெத்தேல் நகர், 4–வது குறுக்கு வீதி, ஈஞ்சம்பாக்கம், சென்னை – 600 115 |
| 13. | ரா.நவீன்குமார், த/பெ ராஜேந்திரன், 15, விநாயகர் கோயில் வீதி, பெரும்பேர்கண்டிகை, அச்சரப்பாக்கம், காஞ்சிபுரம் – 603 310 |
| 14. | ஜெ.அபிபிரியா, த/பெ ஜெஸ்டின், 100, இராஜவீதி, திருமனூர், வாழப்பாடி, சேலம் – 636 202 |
| 15. | அ.அழகர்சாமி, த/பெ அழகர், 25, பக்தசேவா தெரு, காந்தி நகர், போடிநாயக்கனூர், தேனி – 625 513 |
| 16. | ம.ஹரிஹரன், த/பெ மனோகரன், 3/62, சன்னதி தெரு, மரக்காணம், திண்டிவனம், விழுப்புரம் – 604 303 |
| 17. | ரா.சிவக்குமார், த/பெ ராமகிருஷ்ணன், 3/95, கங்கையம்மன் கோயில் தெரு, மேட்டுப்பாளையம், பூவிருந்தமல்லி, திருவள்ளூர் – 600 077 |
| 18. | இ.ஸ்டாலின், த/பெ இம்மானுவேல், 4, மல்லிகா நகர், பி.வி.வைத்தியலிங்கம் சாலை, பழைய பல்லாவரம், சென்னை – 600 043 |
| 19. | ஆ.நிவின் சாய், த/பெ ஆனந்த், 96, மேற்குத் தெரு, கருப்பட்டி, வாடிப்பட்டி, மதுரை – 625 205 |
| 20. | ஆ.ரினி, த/பெ ஆரோக்கியசாமி, 19, தாயுமானவர் தெரு, திருநகர், காட்பாடி, வேலூர் – 632 006 |
| 21. | பெ.சுஜித், த/பெ பெருமாள், 3/167–ஏ, மாந்தோப்பு குடியிருப்பு, அவினாசிப்பட்டி, மல்லசமுத்திரம், நாமக்கல் – 637 202 |
| 22. | சு.சந்துரு, த/பெ சுப்புராம், 144, பூம்புகார் மேற்கு, பல்லடம் சாலை, திருப்பூர் – 641 604 |
| 23. | சு.குமாரசாமி, த/பெ சுப்பிரமணியன், 4, குட்டையப்பிள்ளை தெரு, திருப்பரங்குன்றம், மதுரை – 602 005 |
| 24. | மு.குமரேசன், த/பெ முனுசாமி, 7, 2–வது தெரு, குயப்பேட்டை, போரூர், சென்னை – 600 116 |
| 25. | ரா.பிரவீன்குமார், த/பெ ராஜேந்திரன், 506, வடக்குத் தெரு, கீழ்மாம்பட்டு, பண்ருட்டி, கடலூர் – 607 106 |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 05.09.2026

கலைஞர் 100 1924 - 2023


# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 12.09.2026 – சனிக்கிழமை அன்று மாலை 3.00 மணியளவில், காட்டுமன்னார்கோவில், எம்.ஆர்.கே. கலையரங்கத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதிகள் கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, மற்றும் கழக அயலக அணி துணைச் செயலாளர் ப.பரிதி இளம்சுருதி ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட காட்டுமன்னார்கோவில், சிதம்பரம், புவனகிரி, குறிஞ்சிப்பாடி, கடலூர் ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழுக் கூட்டத்தில், கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மறுசீரமைப்பு குறித்து.
2. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.